# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 217/மா/2024
**நாள்: 01.07.2025**

திருமதி. ஐரின் சந்தியாகு --- முறையீட்டு மனுதாரர்
சென்னை

மண்டல அலுவலர், --- எதிர்மனுதாரர்
மண்டலம்–15
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை–600 097, துரைப்பாக்கம், மேட்டுகுப்பம், 1வது தெரு, 1வது குறுக்குத் தெரு, பிளாட் எண் 34 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி ஐரின் சந்தியாகு என்பவரின் 09.08.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.08.2024 அன்று பெறப்பட்டு 217/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 097, துரைப்பாக்கம், மேட்டுகுப்பம், 1வது தெரு, 1வது குறுக்குத் தெரு, பிளாட் எண் 34 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி ஐரின் சந்தியாகு என்பவர் தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

(1) என் வீட்டை சுற்றிலும் கழிவு நீரும், மழை நீரும் தேங்கிய நிலையில் உள்ளது கடந்த 10 ஆண்டுகளாய்.

(2) இதனால் பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது. எனக்கு wheezing (மூச்சு திணறல், மூச்சு வாங்குவது, (Allergy) அலர்ஜி, காலில் புண் மற்றும் அடிக்கடி ஜுரம், சளி போன்றவை ஏற்பட்டு கொண்டே இருக்கின்றது.

(3) துர்நாற்றம் எப்போதும் வீசிக் கொண்டே இருக்கும்

(4) விஷபூச்சிகள், பாம்பு, கொசு, தவளை, நத்தை, புழுக்கள், வண்டுகள் நிறைய உள்ளன.

(5) பிளாட் 35ல் தேங்கியுள்ள தண்ணீரால் எங்கள் நல்ல தண்ணீர் அடிக்கடி mix ஆகி வருகின்றது.

(6) வீட்டை சுற்றி மூன்று பக்கங்களிலும், நிறைய தண்ணீர் ஒவ்வொரு நாளும் நிறைய ஆகிறதே தவிர குறைவது இல்லை. இதனால் மண்ணின் தன்மை பழுது அடைந்து வருகின்றது. மனஉளைச்சல் சொல்வதற்கு இல்லை.

(7) எங்கள் வீடும் பழுது ஆகி கொண்டே இருக்கிறது.

(8) மாதம் ஒருமுறை ரபிஷ், மணல் நாங்கள் வாங்கி போட்டு கொண்டே வருகின்றோம்.

(9) தயவு செய்து தண்ணீர் (கழிவு நீர், மழைநீர்) வெளியேற முன்பு போன்று கால்வாய் அமைத்து தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(10) என்னை சுற்றி மிகவும் மோசமான சுகாதார கேடு நிலவி உள்ளது. இதை A.E. அவர்கள் தான் சரி செய்ய வேண்டும். (Corporation A.E.)

(11) கழிவு நீர் கால்வாய் அமைத்து தரும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 27.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15–ன் மண்டல அலுவலர் தனது 28.04.2025 மற்றும் 02.06.2025 நாளிட்ட கடிதம் ம.அ.15.ந.க.எண்.அ5/1639/2025–ல் தெரிவிக்கப்பட்ட அறிக்கைகளில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"மனுதாரர் புகார் தொடர்பாக செயற்பொறியாளரால் மேற்படி இடத்தை நவம்பர் 2024ல் கள ஆய்வு செய்யப்பட்டு இரண்டு 50 HP டிராக்டர் மோட்டார் கொண்டு பைப்புகள் வைக்கப்பட்டு தேங்கிய மழை நீரை பாரதிநகர் பிரதானசாலை மூலமாக அகற்றி செகரட்டரியேட் காலனி கால்வாயில் விடப்பட்டது. மேலும் சுகாதார ஆய்வாளர்/பொது சுகாதாரத்துறை அவர்களால் ML ஆயில் கொண்டு Spray அடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் ராஜீவ் கார்டன் முழுவதும் தொடர்ந்து கொசு மருந்து அடிக்கும் பணியும் பருவ மழை காலம் முடியும் வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் (CMWSSB) மூலம் பாதாள சாக்கடை கட்டும் பணியும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ராஜீவ் கார்டன் பகுதியில் 1வது குறுக்கு தெரு மற்றும் 3வது பிரதான சாலை, 1வது பிரதான சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி 20.05.2025 முடிக்கப்பட்டது. மேலும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று சம்பந்தப்பட்ட CMWSSB துறையிடம் வலியுறுத்தி மனுதாரரின் வீட்டின் அருகேயே Machinehole Chamber அமைக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் வீட்டின் மேற்கு பக்கம் உள்ள காலி நிலத்தில் தாழ்வான பகுதியில் மாநகராட்சியால் மண் கொட்டப்பட்டு சமன் செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட அபிவிருத்தி பணிகள் விரைவில் முடிக்கப்படும்.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 03.06.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 28.05.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி ஐரின் சந்தியாகு என்பவர் 03.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"கடந்த 10 ஆண்டுகளாய், என் வீட்டை சுற்றிலும் கழிவு நீரும், மழை நீரும் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு எனக்கு மூச்சு திணறல், மூச்சு வாங்குவது, அலர்ஜி, காலில் புண் மற்றும் அடிக்கடி ஜுரம் சளி போன்றவை ஏற்பட்டு கொண்டே இருக்கின்றது. மேலும் பிளாட் 35ல் தேங்கியுள்ள தண்ணீரால் எங்கள் நல்ல தண்ணீர் வீணாகி போகிறது. அதனுடன் விஷபூச்சிகள், பாம்பு, கொசு, தவளை, நத்தை, புழுக்கள் வண்டுகள் போன்றவற்றால் எங்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. கழிவு நீர் மற்றும் மழைநீர் தேங்குவதால் இவற்றை வெளியேற்றும் வகையில் கால்வாய் அமைத்து தரவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் அலுவலகத்தால் மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருப்பினும் எங்கள் பக்கத்து பிளாட் 35ல் தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் இடர்பாடுகளை நீக்கிட பிளாட் உரிமையாளருக்கு உரிய அறிவுரையும் கழிவு நீர் எடுக்க மெட்ரோ வாட்டர் லாரி சரியாக வருவது இல்லை. எனவே மெட்ரோ வாட்டர் லாரி முறையாக வர பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவிப் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 03.06.2025 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மேற்படி இடத்தை நவம்பர் 2024ல் கள ஆய்வு செய்யப்பட்டு இரண்டு 50 HP டிராக்டர் மோட்டார் பம்புகள் வைக்கப்பட்டு தேங்கிய மழை நீரை பாரதி நகர் பிரதான சாலை வழியாக அகற்றி செகரட்டரியேட் காலனி கால்வாயில் விடப்பட்டது. மேலும் சுகாதார ஆய்வாளர் / பொது சுகாதாரத்துறை அவர்களால் ML ஆயில் கொண்டு Spray அடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் குறிப்பிடும் ராஜீவ் கார்டன் முழுவதும் தொடர்ந்து கொசு மருந்து அடிக்கும் பணியும் பருவ மழை காலம் முடியும் வரையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் (CMWSSB) மூலம் பாதாள சாக்கடை கட்டும் பணியும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ராஜீவ் கார்டன் பகுதியில் 1வது குறுக்கு தெரு மற்றும் 3வது பிரதான சாலை, 1வது பிரதான சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி 20.05.2025 முடிக்கப்பட்டது. மேலும் மனுதாரரின் கோரிக்கையை ஏற்று சம்பந்தப்பட்ட(CMWSSB) துறையிடம் வலியுறுத்தி மனுதாரரின் வீட்டின் அருகேயே Machinehole Chamber அமைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மனுதாரரின் வீட்டின் மேற்கு பக்கம் உள்ள காலி நிலத்தில் தாழ்வான பகுதியில் மாநகராட்சியால் மண் கொட்டப்பட்டு சமன் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் பக்கத்து பிளாட் எண் 35ன் உரிமையாளருக்கு உரிய தாக்கீது சுகாதார துறை மூலம் வழங்கி மனையை சுத்தப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் மேற்கண்ட அபிவிருத்தி பணிகள் விரைவில் முடிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இத்துடன் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்ட புகைப்பட நகல்களை இம்முறை மன்ற நடுவம் முன் சமர்ப்பிக்கிறேன்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

கடந்த 10 ஆண்டுகளாய், தன் வீட்டை சுற்றிலும் கழிவு நீரும், மழை நீரும் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தனக்கு மூச்சு திணறல், மூச்சு வாங்குவது, அலர்ஜி, காலில் புண் மற்றும் அடிக்கடி ஜுரம் சளி போன்றவை ஏற்படுவதாகவும், மேலும் பிளாட் 35ல் தேங்கியுள்ள தண்ணீரால் தனது இடத்தின் நல்ல தண்ணீர் வீணாகி போகிறது என்றும், அதனுடன் விஷபூச்சிகள் போன்றவற்றால் தனக்கு மிகவும் சிரமம் ஏற்படுவதாகவும், தேங்கியுள்ள கழிவு நீர் மற்றும் மழைநீரை வெளியேற்றும் வகையில் கால்வாய் அமைப்பது போன்ற கோரிக்கைகள் தொடர்பாக, தற்போது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் அலுவலகத்தால் மேற்கண்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருப்பினும், தனது பக்கத்து பிளாட் 35ல் தண்ணீர் தேங்குவதால் ஏற்படும் இடர்பாடுகளை நீக்கிட பிளாட் உரிமையாளருக்கு உரிய அறிவுரையும், கழிவு நீர் எடுக்க மெட்ரோ வாட்டர் லாரி முறையாக வருவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15ன் மண்டல அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது மனுதாரரது மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரரின், மேற்படி இடத்தை நவம்பர் 2024ல் கள ஆய்வு செய்யப்பட்டு இரண்டு 50 HP டிராக்டர் மோட்டார் பம்புகள் வைக்கப்பட்டு தேங்கிய மழை நீரை பாரதி நகர் பிரதான சாலை வழியாக அகற்றி செகரட்டரியேட் காலனி கால்வாயில் விடப்பட்டது என்பதும், சுகாதார ஆய்வாளர் / பொது சுகாதாரத்துறை அவர்களால் ML ஆயில் கொண்டு Spray அடிக்கும் பணியும் பருவ மழை காலம் முடியும் வரையில் மனுதாரர் குறிப்பிடும் ராஜீவ் கார்டன் முழுவதும் தொடர்ந்து கொசு மருந்து அடிக்கும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் (CMWSSB) மூலம் பாதாள சாக்கடை கட்டும் பணி பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ராஜீவ் கார்டன் பகுதியில் 1வது குறுக்கு தெரு மற்றும் 3வது பிரதான சாலை, 1வது பிரதான சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியும் 20.05.2025 முடிக்கப்பட்டது என்பதும், மனுதாரரின் வீட்டின் அருகில் Machinehole Chamber அமைக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும், மேலும் மனுதாரரின் வீட்டின் மேற்கு பக்கம் உள்ள காலி நிலத்தில் தாழ்வான பகுதியில் மாநகராட்சியால் மண் கொட்டப்பட்டு சமன் செய்யப்பட்டுள்ளது எனவும், மனுதாரரின் பக்கத்து பிளாட் எண் 35ன் உரிமையாளருக்கு உரிய தாக்கீது சுகாதார துறை மூலம் வழங்கி மனையை சுத்தப்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 15–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் புகைப்படங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் அலுவலகத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மனுதாரரின் பக்கத்து காலிமனை எண் 35–ன் உரிமையாளருக்கு உரிய தாக்கீது வழங்கவும், மெட்ரோ லாரி முறையாக வருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 15–ன் மண்டல அலுவலருக்கு உரிய அறிவுரை வழங்க, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 1–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி ஐரின் சந்தியாகு,
பிளாட் எண் 34, ராஜீவ் கார்டன்,
1வது தெரு, 1வது குறுக்கு தெரு,
ஒக்கியம் துரைப்பாக்கம்,
மேட்டுக்குப்பம்,
சென்னை–600 097.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 15, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 120, இராஜீவ் காந்தி சாலை,
சோழிங்கநல்லூர்,
சென்னை–600 119.

4) கண்காணிப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

3/7/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

3/7/25
1/10